<u>சார்பு நீதிமன்றம், சங்ககிரி</u>

MCOP.No.50/2019

எ.ம.சா.1

நாள். 24.07.2025.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | அரவிந்தகுமார் | மதம்: | |
| தகப்பனார்/ கணவர் பெயர்: | ஆர்.முரளி | ஜாதி: | |
| கிராமம்: | | வேலை: | சட்ட அலுவலர் |
| வட்டம்: | | வயது: | |

2025 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 24 ஆம் நாள் மேற்குறிப்பிட்ட சாட்சியாகிய எ.ம.சா.1 ன் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு 44 வது பிரிவின் கீழ் திரு.ந.பன்னீர்செல்வம்,பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்பட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

<u>முதல் விசாரணை</u>

நான் இம்மனுவின் 4 ம் எதிர்மனுதாரர் அலுவலகத்தில் சட்ட அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் எங்களது தரப்பு வழக்கிற்கு ஆதரவாக முதல் விசாரணை சாட்சிய நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் கண்டுள்ள சான்றாவணங்கள் பட்டியலில் உள்ள வரிசை எண்.1 முதல் 4 வரையிலான ஆவணங்கள் முறையே எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

<u>குறுக்கு விசாரணை</u>

விபத்தை நான் நேரில் பார்க்கவில்லையென்றால், சரிதான். விபத்து ஏற்படுத்திய வாகனத்திற்கு விபத்து தேதியில் முழுமையான காப்பீடு அமுலில் இருந்தது என்றால், சரிதான். இந்த மனுதாரர் எங்களை பொறுத்தவரை 3 ம் தரப்பினர் என்றால், சரிதான். 1 ம் எதிர்மனுதாரர்மீதுதான் விபத்து சம்பந்தமாக குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால், சரிதான். 1 ம் எதிர்மனுதாரர் இரும்பு பாரம் ஏற்றி சென்றதாக முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிட்டு சொல்லவில்லையென்றால், சரிதான்.

இறந்துபோனவர் விபத்தின்போது தலை கவசம் அணியவில்லை என்று நான் சொல்வது பொய் என்றால், சரியல்ல. எ.ம.சா.ஆ.4 ல் சந்தேசகத்தின் பலனை எதிரிக்கு வழங்கிதான் அவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார் என்றால், சரிதான். நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் பின் யோசனையில் சொல்லப்பட்டவை என்றாலும், எதிர் வழக்குரையில் குறிப்பிட்டுள்ள சொல்லவில்லை என்றாலும், சரியல்ல. அதனால் மனுதாரருக்கு கிடைக்கவேண்டிய இழப்பீட்டை நாங்கள் ஈடு செய்ய கடமைப்பட்டவர்கள் என்றால், சரியல்ல.

ஒப்பம்/- அரவிந்குமார்

ஒப்பம்/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.